RNI-NO: TNTAM/2021/83936




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
www.malaithanthi.in
மாலை நாளிதழ்
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 42 | பிப்ரவரி.18 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# வருவாய்ப் பற்றாக்குறை ரூ.48,696.32 கோடி, கடன் சுமை ரூ.10.71 லட்சம் கோடி : தமிழக இடைக்கால பட்ஜெட்டில் தகவல்

சென்னை: பிப்.18-

“2026-27 ஆம் ஆண்டு இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்ப் பற்றாக்குறை 48,696.32 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், 2026-27 ஆம் ஆண்டில் மாநில அரசு 178,308.05 கோடி ரூபாய் அளவிற்கு மொத்தக் கடன் பெற திட்டமிட்டுள்ளது. 60,418,42 கோடி ரூபாய் மதிப்பிலான பொதுக் கடனை அரசு திருப்பிச் செலுத்தும். இதன் விளைவாக, 31.03.2027 அன்று நிலுவையில் உள்ள கடன் 10,71,770.34 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது” என நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

இது குறித்து இடைக்கால பட்ஜெட்டில் வெளியான அறிவிப்பின் விவரம் வருமாறு: 2026 27 ஆம் ஆண்டு இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்ப் பற்றாக்குறை 48,696.32 கோடி ரூபாயாக மதிப்பிடப்பட்டுள்ளது.

வரி வசூலை மேம்படுத்துதல், வரி வசூல் நிர்வாகத்திறனை மேம்படுத்துதல் உள்ளிட்ட வருவாயைப் பெருக்கும் நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு, வருவாய்ப் பற்றாக்குறை 2027-28 ஆம் ஆண்டில் 42964.61 கோடி ரூபாயாக குறையும் எனவும், அதன் தொடர்ச்சியாக 2028 29 ஆம் ஆண்டில் 35,115.33 கோடி ரூபாயாக குறையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது. இது கூடுதல் மூலதனச் செலவினத்திற்கு வழிவகை செய்யும்.



2026-27 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவுசெலவுத் திட்ட மதிப்பீடுகளில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) மதிப்பில் நிதிப்பற்றாக்குறையின் விகிதம் 200 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, பொருளாதாரம் மற்றும் நிதிநிலையில் பல்வேறு சவால்களை சந்தித்து வரும் நிலையிலும், நிதிநிலையை மேம்படுத்துவதில் அரசிற்கு உள்ள உறுதிப்பாட்டை வெளிக்காட்டுகிறது.

2027-28 மற்றும் 2028-29 ஆம் ஆண்டுகளில், இது முறையே, 288 சதவீதம் மற்றும் 230 சதவீதமாக இருக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. இது, தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம், 2003 இல் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கிற்குள் உள்ளது.

ஒன்றிய அரசு நிர்ணயிக்கும் ஒட்டுமொத்தக் கடன் வரம்பின் அடிப்படையில், கடன் பெறுதலும் திரும்பச் செலுத்துதலும் மதிப்பிடப்பட்டுள்ளன. 2026 27 ஆம் ஆண்டில் மாநில அரசு 178,308.05 கோடி ரூபாய் அளவிற்கு மொத்தக் கடன் பெற திட்டமிட்டுள்ளது. மேலும், 60,418,42 கோடி ரூபாய் மதிப்பிலான பொதுக் கடனை அரசு திருப்பிச் செலுத்தும்.

இதன் விளைவாக, 31.03.2027 அன்று நிலுவையில் உள்ள கடன் 10,71,770.34 கோடி ரூபாயாக இருக்கும் என மதிப்பிடப்படுகிறது. 202027 ஆம் ஆண்டில் மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் இது 20:35 சதவீதம் ஆகும்.

எனினும், சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் ஒன்றிய அரசின் திட்டமாக ஒப்பளிக்கப்பட்ட பின்னர் ஒன்றிய அரசின் கணக்குகளில் இடம்பெறவேண்டிய 9,522.65 கோடி ரூபாயும் மொத்த நிலுவைக் கடன்களில் உள்ளடங்கும்.

இக்கடன் தொகையை தவிர்த்து மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிலுவையிலுள்ள மொத்த கடன் விகிதம் 20:12 ஆகவும், மேலும், சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளுக்கான கடன் தவிர்த்து மாநில மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பில் நிலுவையிலுள்ள மொத்த கடன், 202728 ஆம் ஆண்டில் 25.30 சதவீதமாகவும், 202829 ஆம் ஆண்டில் 25.43 சதவீதமாகவும் மேலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு, சீரிய நிதி மேலாண்மையின் ஒரு பகுதியாக கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான திறனை தக்கவைக்க அரசு திட்டமிட்டுள்ளது” எனத் தெரிவிக்கப்பட்டது.



## “தமிழக இடைக்கால பட்ஜெட்... மேனா மினுக்கி உரை!” : பழனிசாமி விமர்சனம்

சென்னை: பிப்.18-

“கடந்த 5 ஆண்டுகளைப் போல இந்த இடைக்கால நிதி நிலை அறிக்கையும் வார்த்தை ஜாலங்கள் நிறைந்த மேனா மினுக்கி உரையாகத்தான் இருக்கிறது” என எதிர்க்கட்சித் தலைவரும், அதிமுக பொதுச் செயலாளருமான எடப்பாடி பழனிசாமி விமர்சித்துள்ளார்.

இது குறித்து அவர் இன்று செய்தியாளர்களிடம் கூறியது: “ஏமாற்று வேலை திராவிட மாடல் அரசு தனது கடைசி பட்ஜெட்டை சட்டப்பேரவையில் தாக்கல் செய்துள்ளது. தமிழ்நாட்டு மக்களுக்கு அரசு எப்படி காது குத்தியுள்ளது என்பதை வெளிப்படுத்தி இருக்கிறோம். 2021 ல் திமுக அளித்த தேர்தல் வாக்குறுதிகளில் 4ல் ஒரு பங்கைகூட நிறைவேற்றவில்லை. திமுகவினர் 95 சதவீத வாக்குறுதிகளை நிறைவேற்றிவிட்டதாக பொய் சொல்கிறார்கள்.

அரசு ஊழியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைவரையும் இந்த அரசு ஏமாற்றியுள்ளது. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. கடந்த 5 ஆண்டுகளைப் போல இந்த இடைக்கால நிதிநிலை அறிக்கையும் வார்த்தை ஜாலங்கள் நிறைந்த மேனா மினுக்கி உரையாகத்தான் இருக்கிறது.

நிதி நிலைமையை சரிசெய்ய ரகுராம் ராஜன் அடங்கிய குழு அமைக்கப்பட்டது. ஆனால், அதன் பின்புதான் கடன் அதிகரித்துள்ளது. மாநிலத்தின் கடன் சுமை அதிகரித்துக் கொண்டே சென்றால், மக்கள் மீது வரிச்சுமை அதிகரிக்கும். தமிழகத்தின் நிதிப்பற்றாக்குறை ரூ.16,000 கோடி அதிகரித்துள்ளது.

வேளாண் பட்ஜெட் எனக் கூறி மக்களை ஏமாற்றியிருக்கிறார்கள். அத்திப்பழம் வெளியே அழகாக இருக்கும். உற்றுப் பார்த்தால் உள்ளே சொத்தையாக இருக்கும். இதற்கு உதாரணம் இந்த நிதிநிலை அறிக்கை.

வரவு செலவு திட்டம் பற்றி உருப்படியாக எதுவும் இல்லை. ஒரு வருடத்திற்கு 100 நாட்கள் சட்டமன்ற நிகழ்வு நடைபெறும் என தெரிவித்தார்கள். ஆனால் ஐந்து வருடங்களில் மொத்தமாகவே 140 நாட்கள் தான் சட்டப்பேரவை கூட்டப்பட்டிருக்கும் என கருதுகிறேன். அதிமுக தலைமையிலான கூட்டணி ஆட்சியமைக்கும்” என்று பழனிசாமி தெரிவித்தார்.



■ மதுரை மாவட்டம் பேரையூர் வட்டத்தில் ரூபாய் 13.71 கோடி மதிப்பீட்டில் 35,212 சதுர அடி பரப்பளவில் புதிதாக கட்டப்பட்டுள்ள பேரையூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாக கட்டடப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப.,பார்வையிட்டார். பேரையூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நீதிமன்ற மண்டபம் 1 & நீதிமன்ற மண்டபம் 2, நீதிபதி அறை, கார் பார்க்கிங், வழக்கறிஞர் காத்திருப்பு அறை, அரசு வழக்கறிஞர் (GP), பொது வழக்கறிஞர் (PP) & உதவி பொது வழக்கறிஞர் (APP) அறை, இலவச சட்ட உதவி மையம்,கணினி இநீதிமன்றம் (E-Court), பாதுகாப்பு அறை (Strong Room), மருந்தகம், கழிப்பறைகள், நீதிமன்ற அலுவலகம், பதிவறை, காவல்துறை காத்திருப்பு அறை, நகலெடுப்பு பிரிவு (Copyist Section), ரிசீவர் நீதிமன்றம், நூலகம், தியான மண்டபம், பொதுமக்கள் காத்திருப்பு அறை, எழுதுபொருள் கடை (Stationery Store) காணொளி காட்சி கூட்ட அரங்கு உள்ளிடவை அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## தமிழக இடைக்கால வேளாண் பட்ஜெட் 2026: முக்கிய அம்சங்கள் என்னென்ன?

சென்னை: பிப்.18-

தமிழக அரசின் 202627 இடைக்கால வேளாண் பட்ஜெட்டை இன்று (பிப்.17) சட்டப்பேரவையில் வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். இந்த உரையில் இடம்பெற்ற முக்கிய அம்சங்கள்:

› தென்னை விவசாயத்தை ஊக்குவிக்க 53 லட்சம் தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. 21 லட்சம் பழச்செடிச் தொகுப்புகள் பயனாளிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளன.

› நெல் ஜெயராமன் மரபுசார் நெல் ரகங்கள் பாதுகாப்பு இயக்கத்தில் 900 மெட்ரிக் டன் பாரம்பரிய நெல் விதைகள் உற்பத்தி செய்யப்பட்டு 70,000 விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

› நெல் சாகுபடிப் பரப்பை அதிகரிக்க குறுவை சிறப்புத் தொகுப்பு திட்டம் ரூ.5.482 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டு 19.51 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

› 2021-22 முதல் 2024-25 ஆம் ஆண்டு வரை, இளைஞர்களை வேளாண் தொழில் முனைவோராக்குதல் திட்டம் மூலம் 456 பட்டதாரி இளைஞர்கள் வேளாண் சார்ந்த தொழில் தொடங்க ஊக்குவிக்கப்பட்டு, அவர்களுக்கு ரூ.4.56 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது.

› தமிழ்நாடு சிறுதானிய இயக்கம் 202324ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டுத் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில், இதுவரை 12.84 லட்சம் விவசாயிகள் ரூ.178 கோடி நிதியில் பயனடைந்துள்ளனர். 20 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சிறுதானியப் பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

› தேசிய அளவில், தமிழ்நாடு கேழ்வரகு உற்பத்தித் திறனில் முதல் இடம், கேழ்வரகு உற்பத்தியில் இரண்டாம் இடம், குறுதானியங்கள் உற்பத்தியில் ஐந்தாம் இடம் பெற்று சாதனை படைத்துள்ளது.





› கம்பு சாகுபடிப் பரப்பு 113 லட்சம் ஏக்கரிலிருந்து 133 லட்சம் ஏக்கராக அதிகரித்துள்ளது.

› வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மொத்தம் 77,499 வேளாண் இயந்திரங்கள், கருவிகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. 1,320 வேளாண் இயந்திர வாடகை மையங்களும் நிறுவப்பட்டன. இதற்கென மானியமாக மொத்தம் ரூ.783 கோடி வழங்கப்பட்டது.

› 4,150 சூரிய சக்தி பம்புசெட்டுகள் நிறுவப்பட்டு ரூ.83 கோடி மானியம் விடுவிக்கப்பட்டுள்ளது. மேலும் 5,954 புதிய மின்மோட்டார் பம்புசெட்டுகளும் ரூ.7.67 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன.

› கடந்த ஐந்து ஆண்டுகளில், இதுவரை சுமார் 2 லட்சம் புதிய இலவச மின்சார இணைப்புகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

› கடந்த 5 ஆண்டுகளில், தோட்டக்கலைத் துறை மூலம் 68 லட்சம் பனை விதைகள், 1 லட்சத்து 28 ஆயிரம் பனங்கன்றுகள் விநியோகம், 354 பனை மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் கூடங்கள் ஆகிய செயல்படுத்தப்பட்டன.

› சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.156/ம், சாதாரண ரகங்களுக்கு ரூ.131/ம் ஊக்கத்தொகையாக வழங்கி அவற்றின் கொள்முதல் விலை முறையே ரூ.2,545 மற்றும் ரூ.2,500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

› 5 ஆண்டுகளில் இதுவரை 186 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு ரூ.2,118 கோடி ஊக்கத்தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

› பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில் 5 ஆண்டுகளில் 184 லட்சம் ஏக்கர் பரப்பு, சுமார் 80 லட்சம் விவசாயிகளால் காப்பீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தில், மகசூல் இழப்பிற்கு 38 லட்சம் விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் ரூ.6,063 கோடி வழங்கப்பட்டுள்ளது.

› தமிழ்நாட்டில் கடந்த 5 ஆண்டுகளில், இயற்கைப் பேரிடர்களால் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைப் பயிர்களில் 16.20 லட்சம் ஹெக்டரில் ஏற்பட்ட பயிர் சேதத்திற்கு ரூ.2.045 கோடி நிவாரணமாக வழங்கப்பட்டது. இதனால் 25.36 லட்சம் விவசாயிகள் பயனடைந்துள்ளனர்.

› நாகப்பட்டினம். சிவகங்கை, கரூர் மாவட்டங்களில் மூன்று அரசு வேளாண் கல்லூரிகள் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு தோட்டக்கலைக்கல்லூரி புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன.

› கடந்த ஐந்து ஆண்டுகளில், 101 புதிய பயிர் ரகங்கள், 21 வேளாண் நுட்பங்கள், 16 புதிய பண்ணைக் கருவிகள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

› வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்நாடு 2021ஆம் ஆண்டில் 74 சதவீதமாக இருந்த இளங்கலை மொத்த மாணவர் சேர்க்கை 2025 ஆம் ஆண்டில் 97 சதவீதமாக உயர்ந்துள்ளது.

› கடந்த ஐந்து ஆண்டுகளில் இதுவரை 83 இலட்சத்து 64 ஆயிரம் விவசாயிகளுக்கு 69.457 கோடி ரூபாய் பயிர்க்கடனும், 16 இலட்சத்து 9 ஆயிரம் நபர்களுக்கு 8,938 கோடி ரூபாய் கால்நடை வளர்ப்பு. மீன் வளர்ப்பு உள்ளிட்ட வேளாண் சார்ந்த நடவடிக்கைகளுக்கான கடனும் வழங்கப்பட்டுள்ளன.

› உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் இதுவரை, 6.47 இலட்சம் பயனாளிகளுக்கு கல்வி, திருமணம், விபத்து நிவாரணம், மரணம் போன்றவற்றிற்கு உதவித்தொகையாக ரூ. 819 கோடி வழங்கப்பட்டுள்ளது.

› 201112 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 202425 ஆம் ஆண்டில் வேளாண்மையில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு 9.97 சதவீதம் உயர்ந்துள்ளது.

› 201112ஆம் ஆண்டில், 53,75,639 லட்சம் ரூபாயாக இருந்த மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி மதிப்பு, 202425 ஆம் ஆண்டில், 59,11,708 லட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது.

› 202122 ஆம் ஆண்டில், வரவு செலவுத்திட்டத்தில் ரூ.34,220 கோடியாக இருந்த நிதி ஒதுக்கீடு, 202526 ஆம் ஆண்டில், ரூ.45,661 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

› 202627 ஆம் ஆண்டிற்கான இடைக்கால வரவு செலவுத் திட்டத்தில், வேளாண்மை உழவர்நலத் துறைக்கு 47,248.24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.






■ சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம் தாயமங்கலம் இலங்கையர் மறுவாழ்வு முகாமில் புதிதாக கட்டப்பட்ட 52 வீடுகள் கடந்த (16.02.2026) பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் வீடுகளை திறந்து வைத்தார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி, பயனாளிகளுக்கு வீட்டு சாவிகளை வழங்கினார். நிகழ்வில் மானாமதுரை எம்.எல்.ஏ ஆ.தமிழரசி ரவிக்குமார் , மானாமதுரை நகர் மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்றனர்.

# நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்



நீலகிரி, பிப்.18-

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு, பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 235 மனுக்களை பெற்றுக் கொண்டார்.

ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமை அன்று நடைபெறும் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது, சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், மத்திய கூட்டுறவு வங்கியின் சார்பில் துளசி மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ரூ.6 இலட்சமும், பிளஸ்சிங் மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ரூ.4 இலட்சமும், வடிவேல் மகளிர் சுய உதவிக்குழுவிற்கு ரூ.3 இலட்சமும் என மொத்தம் 3 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.13 இலட்சம் மதிப்பில் கடனுதவி பெறுவதற்கான ஆணைகளையும், மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் உதகை மேட்டுச்சேரி விசி காலனி பகுதியை சேர்ந்த ஜானகி என்பவருக்கு புதிய மின்னணு குடும்ப அட்டையினையும், தமிழ் வளர்ச்சித்துறையின் சார்பில் குறள் வார விழாவினை முன்னிட்டு, சி.எஸ்.ஐ.சி.எம்.எம் மேல்நிலைப்பள்ளியில் நடத்தப்பட்ட பொதுமக்களுக்கான குறள் ஒப்பித்தல் போட்டியில் முதல் இடத்தினை பெற்ற 5 நபர்களுக்கு தலா ரூ.5,000/மும், இரண்டாம் இடத்தினை பெற்ற 5 நபர்களுக்கு தலா ரூ.3,000/மும், மூன்றாம் இடத்தினை பெற்ற 5 நபர்களுக்கு தலா ரூ.2,000/ மற்றும் பாராட்டு சான்றிதழ்களையும், ஓவியப்போட்டியில் வெற்றி பெற்ற 3 நபர்களுக்கு தலா ரூ.10,000/ மற்றும் பாராட்டுச்சான்றிதழ்களை வழங்கி பாராட்டினார்.

மேலும், தமிழ்நாடு அரசின் அரசு மற்றும் அரசு உதவிப்பெறும் பள்ளிகளுக்காக நடத்தப்பட்ட கலைத்திருவிழா 2026ல் மாநில அளவில் வெற்றி பெற்ற 25 மாணவ, மாணவியர்கள் மற்றும் தேசிய அளவில் சிலம்பம் போட்டியில் வெற்றி பெற்ற நசரத் கான்வென்ட் மேல்நிலைப்பள்ளி மாணவி ஸ்ரீசார்விகா, யூனிக் இண்டர்நேஷசனல் பள்ளி மாணவன் பிரித்விக் ஆகியோர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களை நேரில் சந்தித்து, பாராட்டு சான்றிதழ்கள், கேடயங்கள் மற்றும் தங்க பதக்கங்களை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ராஜா, மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (கணக்குகள்) பாலச்சந்திரன், தமிழ் வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் விக்னேஷ் உட்பட பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஊத்துக்கோட்டை அருகே பாலவாக்கத்தில் வாகன சோதனையில் போது 4கிலோ கஞ்சாவை போலீசார் பறிமுதல்





திருவள்ளூர்,பிப்.18-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பாலவாக்கம் தற்காலிக சோதனை சாவடி அருகில் 16.02.2026 அன்று ஆய்வாளர் தேவராஜ் மற்றும் SSI பழனி ஆகியோர் தீவிர வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது ஆந்திராவிலிருந்து வந்த இரு சக்கர வாகனத்தை மடக்கி சோதனை செய்து பார்த்தபோது அதில் சுமார் 4 கிலோ எடை உள்ள கஞ்சா இருந்ததை கைப்பற்றி வியாசார்பாடியை சேர்ந்த 1.சையத்முஸ்ரப் (வ.25) 2.சுகுமார் (வ.35) எண்பவர்கள் மீது வழக்கு பதிவு செய்து புழல் சிறைக்கு அனுப்பப்பட்டனர் இச்சம்பவத்தில் பணியாற்றிய ஊத்துக்கோட்டை சி1.காவல்நிலைய ஆய்வாளர் தேவராஜ் மற்றும் SSI.பழனி காவலருக்கும் அப்பகுதி சமூக ஆர்வலர்கள் தங்கள் நன்றியை தெரிவித்து வருகின்றனர்



# தேனி மாவட்ட காவல்துறையினரின் சீர்மிகு பணியை பாராட்டி நற்சான்றிதழ்

தேனி பிப். 18-

திண்டுக்கல் சரக காவல்துறை துணைத் தலைவர் Dr.P.சாமிநாதன், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் Dr.B.சினேஹா ப்ரியா. வீரபாண்டி காவலர் சமுதாய கூடத்தில் நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் குற்ற வழக்கில் தொடர்புடைய நபர்களை விரைந்து கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்திய காவல்துறையினர் மற்றும் நீதிமன்ற விசாரணையில் வழக்கின் சாட்சிகளை உரிய நேரத்தில் ஆஜர்படுத்தி வழக்கில் குற்றவாளிகளுக்கு தண்டனை விரைந்து கிடைக்கும் வகையில் சிறப்பாக பணிபுரிந்த காவல் அதிகாரிகள், நீதிமன்ற காவலர்களுக்கும் மற்றும் பல்வேறு பணிகளில் சிறந்து விளங்கிய காவல்துறையினரின் சீர்மிகு பணியை பாராட்டி நற்சான்றிதழ்கள் வழங்கி, தனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தார்.

# உதகை அரசு தாவரவியல் பூங்காவில் மே மாதம் நடைபெறவுள்ள 128 வது மலர்காட்சி முன்னிட்டு மலர் நாற்றுகள் நடும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் தொடங்கி வைத்தார்



நீலகிரி, பிப்.18-

நீலகிரி மாவட்டம்,உதகை அரசு தாவரவியல் பூங்காவில் வரும் 2026 மே மாதம் நடைபெறவுள்ள 128வது மலர் காட்சியை முன்னிட்டு, மலர் நாற்றுகள் நடும் பணியினை, மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தொடங்கி வைத்தார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம்தெரிவித்ததாவது:

நீலகிரி மாவட்டம் உதகை அரசு தாவரவியல் பூங்காவில் வரும் 2026 மே மாதம் நடைபெற இருக்கும் 128வது மலர்காட்சியை முன்னிட்டு பூங்காவின் பல்வேறு பகுதிகளில் மலர் பாத்திகள் அமைத்து பல வண்ண மலர்ச் செடிகள் நடவு செய்ய விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதை தொடர்ந்து, இன்றைய தினம் இன்கா மேரிகொல்டு, பிரன்ச் மேரிகோல்டு, லில்லியம்ஸ் மற்றும் டேலியா போன்ற மலர் நாற்றுகள் நடும் பணியானது துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு 2025ல் 7.5 இலட்சம் மலர் செடிகள் நடவு செய்யப்பட்டது.

இவ்வாண்டு சிறப்பு அம்சமாக பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகளை கவரும் வகையில் ஜெரேனியம், சைக்லமன், பால்சம் மற்றும் பல புதிய இரக ஆர்னமெண்டல் கேல், ஓரியண்டல் லில்லி, ஆசியாடிக் லில்லி, டேலியா மற்றும் பிகோனியா, கேன்டீடப்ட், பிரன்ச் மேரிகோல்டு, பேன்சி, பெட்டுனியா, பிளாக்ஸ், ஜினியா, ஸ்டாக், வெர்பினா, சன்பிளவர், சிலோசியா, ஆன்டிரைனம், வீடயான்தஸ், ஆஸ்டர், ஜெர்பரா, க்ரைசாந்திமம், டெல்பினியம், சால்வியா, ஆந்தூரியம் போன்ற 275 வகையான விதைகள் மற்றும் செடிகள் ஜப்பான், அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் பெறப்பட்டு மலர்செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு பூங்காவில் பல்வேறு பகுதிகளில் 10 இலட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. நடவு செய்யப்படும் மலர் நாற்றுகளுக்கு பணியின் தாக்கம் ஏற்படாத வண்ணம் கோத்தகிரி மிலார் செடிகளை கொண்டு பாதுகாப்பு செய்யப்படும்.

மேலும் எதிர்வரும் மலர்க்காட்சியினையொட்டி மலர்க்காட்சி மாடம் மற்றும் கண்ணாடி மாளிகையில் 50,000 வண்ண மலர்த் தொட்டிச் செடிகள் அடுக்கி வைக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கடந்த ஆண்டு இப்பூங்காவிற்கு 22.28 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகைப் புரிந்துள்ளனர். இந்த ஆண்டு 25 இலட்சம் சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள் என எதிர்ப்பார்க்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.இ நிகழ்வில்,தோட்டக்கலைத்துறை இணைஇயக்குநர்நவநீதா, துணை இயக்குநர் (பொ) பபீதா, உதவி இயக்குநர் ஜெயந்தி, பைசல், தோட்டக்கலை துறை அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





# பம்மல் தனியார் மருத்துவமனை திறப்பு விழா பல்லாவரம் எம்எல்ஏ இ.கருணாநிதி திறந்து வைத்து வாழ்த்து தெரிவித்தனர்

பல்லாவரம் பிப்,18-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் அடுத்த பம்மல் தனியார் மருத்துவமனை திறப்பு விழா நடைபெற்றது. திறப்பு விழாவிற்கு சிறப்பு விருந்தினராக பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துணை மேயர் கோ. காமராஜ், மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி, வடக்கு பகுதி செயலாளர் ஜெய்குமார் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி மருத்துவமனையை திறந்து வைத்து மருத்துவமனையை பார்வையிட்டனர். கலந்து கொண்ட சிறப்பு விருந்தினர்களுக்கு நினைவு பரிசு வழங்கப்பட்டது இதில் மாமன்ற உறுப்பினர்கள் மதினாபேகம், கல்யாணி டில்லி, ரம்யாசத்யபிரபு, சண்முகசுந்தரி ஜெய்குமார், சத்யாமதியழகன், சித்ரா தமிழ்குமரன், கலைவாணி பிரபு, 10வது வட்டகழக செயலாளர் முகமது அப்பாஸ் மற்றும் மருத்துவர்கள், செவிலியர்கள் பொதுமக்கள் உட்பட ஏராளமனோர் கலந்து கொண்டனர்



■ கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் பகுதியில் மகா சிவராத்திரியையொட்டி ஸ்ரீ பூங்காவனத்தம்மன், அங்காளம்மன் கோவில்களில் மயானக்கொள்ளை திருவிழா நடைபெற்றது. இன்று மாலை 4:00 மணிக்கு கோவில்களில் இருந்து அம்மன் பூத வாகனத்தில் தென்பெண்ணை ஆற்றை நோக்கி மயான கொள்ளைக்கு புறப்பட்டன.முக்கிய வீதிகளின் வழியாக சென்ற தேர்கள் தென்பெண்ணை ஆற்றின் கரையில் உள்ள அண்ணாதுரை சிலை அருகில் நிறுத்தப்பட்டன. அங்கு முதுகில் அலகு குத்திக்கொண்டு கயிற்றின் மூலம் அந்தரத்தில் தொங்கியபடி பறந்து சென்று சுவாமிக்கு மாலை அணிவித்து, கற்பூரம் காட்டி, குழந்தையை தூக்கிக் கொண்டு ஆசி பெற்றும் பக்தர்கள் வேண்டுதல் நிறைவேற்றினர்.அம்மன் பூத வாகனத்தில் ஊர்வலமாக தென்பெண்ணை ஆற்றுக்குச் சென்று மாலை அணிவித்து தீபாராதனை செய்தனர்.

# பன்னி அள்ளி புதூர் கிராமத்தில் ரூ.4 லட்சம் சிமெண்ட் சாலை பணிக்கு பூமி பூஜை – பேருந்து வசதி கோரி மனு

கிருஷ்ணகிரி, பிப்.18-

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டணம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பன்னி அள்ளி புதூர் கிராமத்தில் எம்எல்ஏ மேம்பாட்டு நிதியில் ரூ.4 லட்சம் மதிப்பில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிக்கு பூமி பூஜை நடைபெற்றது. கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் அசோக்குமார் ணிகளை தொடங்கி வைத்தார். மதிய வேளையில் அரசு பேருந்து சரிவர இயங்காததால் விவசாயிகள், மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர் என பொதுமக்கள் கோரிக்கை மனு அளித்தனர்.இதுகுறித்து அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுக்கப்படும் என எம்எல்ஏ உறுதியளித்தார்.



# தாராபுரம் தொகுதியில் 3 ஒன்றியங்களில் சமுதாய வளைகாப்பு.கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை, அறுசுவை உணவு; அரசு திட்டங்கள் குறித்து அமைச்சர் கயல்விழி விளக்கம்



திருப்பூர், பிப்.18-

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குண்டடம், மூலனூர் உள்ளிட்ட 3 ஒன்றியங்களில் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது. சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் (மிசிஞிஷி) திட்டத்தின் கீழ் கர்ப்பிணி பெண்களுக்கு இந்நிகழ்ச்சி 2026ஆம் ஆண்டு தனியார் திருமண மண்டபங்களில் ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்ச்சிக்கு 400க்கும் மேற்பட்ட கர்ப்பிணி தாய்மார்கள் கலந்து கொண்டனர். பாரம்பரிய முறையில் ‘பெண் வீட்டு சீதனம்’ போன்று வளைகாப்பு நடத்தப்பட்டு, 16 வகையான சீர்வரிசை பொருட்கள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், கர்ப்பிணி பெண்களின் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் சத்துணவு குறித்து அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகள் குறித்து விளக்கினார்.

அவர் கூறுகையில், கர்ப்பிணி பெண்களுக்கு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் ஊட்டச்சத்து மிகுந்த உணவுப் பொருட்கள், முட்டை, பால், சத்துணவு கலவை, மாதாந்திர மருத்துவ பரிசோதனை, இரும்பு மற்றும் கால்சியம் மாத்திரைகள் வழங்கப்படுகின்றன. மேலும், அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் இலவச கர்ப்ப கால பரிசோதனைகள், பாதுகாப்பான பிரசவ வசதிகள், பிறந்த குழந்தைக்கு தடுப்பூசி மற்றும் தொடர்ந்து சத்துணவு ஆதரவு வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

இந்த சமுதாய வளைகாப்பு விழாவில் கர்ப்பிணி பெண்களுக்கு வழங்கப்பட்ட 16 வகை சீர்வரிசை பொருட்களில் புடவை, வளையல், நாட்டு நெய், பேரீச்சம் பழம், பாதாம், உளுந்து, கடலை, சீரகம், மிளகு, சக்கரை, கற்கண்டு, ஆரோக்கிய கலவை மாவு, தேங்காய், பழங்கள், தானியங்கள் மற்றும் பிற ஊட்டச்சத்து பொருட்கள் இடம்பெற்றிருந்தன.

மேலும், கலந்து கொண்ட கர்ப்பிணி பெண்களுக்கு அறுசுவை உணவு பரிமாறப்பட்டது. சாதம், பருப்பு, காய்கறி குழம்பு, கூட்டு, பொரியல், தயிர், இனிப்பு உள்ளிட்ட ஆறு வகையான சத்துணவு உணவுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் நகர மன்ற தலைவர் பாப்பு கண்ணன், நகரச் செயலாளர் முருகானந்தம், குண்டடம் ஒன்றிய செயலாளர் சந்திரசேகரன், ஈஸ்வரர் செட்டிபாளையம் முன்னாள் தலைவர் ஈஸ்வரன், மூலனூர் ஒன்றிய செயலாளர் பழனிச்சாமி, துரை தமிழரசு, பேரூராட்சி செயலாளர்கள் மக்கள் தண்டபாணி, சுரேஷ்குமார் மற்றும் சமூக நலத்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கர்ப்பிணி பெண்களின் நலனை முன்னிறுத்தி அரசு மேற்கொண்டு வரும் திட்டங்கள் சமூகத்தில் நல்ல வரவேற்பைப் பெற்று வருவதாகவும், தாயும் குழந்தையும் ஆரோக்கியமாக இருப்பதே இத்திட்டங்களின் முக்கிய நோக்கமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.



## தாம்பரம்செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டல குழு கூட்டம்

தாம்பரம், பிப்.18-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி 5வது மண்டல குழு கூட்டம் மண்டல அலுவலகத்தில் 5வது மண்டல குழு தலைவர் பகுதி கழக செயலாளர் எஸ்.இந்திரன் அவர்கள் தலைமையில் மற்றும் தாம்பரம் மாநகராட்சியின் துணை ஆணையாளர் வசந்தி அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது இதில் பல்வேறு கோரிக்கைகள் முன் வைத்தனர் இந்த கோரிக்கை அனைத்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என மண்டல தலைவர் உறுதி அளித்தார் உடன் மாமன்ற உறுப்பினர்கள் ரமணி ஆதிமுலம், ஜோதி குமார், மாடம்பாக்கம் நடராஜ், கொடி தாமோதரன், ஷகிலா ஜான்சி மேரி, சசிகலா கார்த்திக், மற்றும் அரசு அதிகாரிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



## திருவையாறு பகுதியில் மாபெரும் கண் சிகிச்சை முகாம்

தஞ்சாவூர், பிப்.18-
திருவையாறு வானவில் தொண்டு நிறுவனம். தஞ்சாவூர் அரசு கண் மருத்துவமனை. மாவட்ட பார்வை இழப்பு தடுப்பு சங்கம். கோவை ஐ. ஐ. வி. எம். கண் மருத்துவ கல்லூரி. மூன்றாம் கண் போட்டோகிராபி. டாட்டூ ஸ்டுடியோ இணைந்து வானவில் தொண்டு நிறுவனத்தின் நிறுவனர் ஜெ.கார்த்திக் தலைமையில் திருவையாறு பகுதியில் மாபெரும் கண் சிகிச்சை முகாம் நடைபெற்றது. கடந்த 11.02.2026 முதல் 15.02.2026 வரை கல்யாண புரத்தில் துவங்கிய முகாம் வீரசிங்கம் பேட்டை. மரூர். 70 பெரம்பூர். திருவையாறு சீனிவாசராவ் மேல்நிலைப் பள்ளி ஆகிய பகுதிகளில் நடைபெற்ற கண் சிகிச்சை முகாமில் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பங்கேற்று பயன் பெற்றனர். இம்முகாமில் 323 கண்புரை நோயாளிகளும் 71 பேருக்கு கண் அறுவை சிகிச்சைக்குப் பரிந்துரை செய்யப்பட்டு முதற்கட்டமாக 26 நோயாளிகள் அறுவை சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டார்கள் அவர்களுக்கு தஞ்சை கண் மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இம்முகாமில் தஞ்சை கண் மருத்துவமனை தலைமை கண் மருத்துவர் விஜய சண்முகம் திருவையாறு வட்டார கண் மருத்துவர் ரங்கராஜ். மருத்துவர் மோனிகா இன்பெண்டா , வானவில் தொண்டு நிறுவனத்தின் பொருளாளர் ஜோதி மற்றும் கோவை IIVM COLLEGE மருத்துவ மாணவர்கள் பங்கேற்றனர்.



## அதிமுகவினர் பொதுமக்களுக்கு தேர்தல் வாக்குறுதி விழிப்புணர்வு

தஞ்சாவூர் பிப். 18-
திருவையாறு அருகே கண்டியூர் திருப்பூந்துருத்தி மற்றும் ஒன்றிய பகுதிகளில் அதிமுக சார்பில் பொதுத்தேர்தலை முன்னிட்டு வாக்குறு திகள் அடங்கிய நோட்டீஸ்களை தஞ்சை மேற்கு மாவட்ட செயலாளர் ரெத்தினசாமி தலைமையில் அதிமுகவினர் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் வீடு வீடாக சென்று பொது மக்களிடம் வழங்கினர்.ஒன்றிய செயலாளர்கள் இளங்கோவன், சூரியபிரகாஷ்,ராஜா, திருவையாறு நகர செயலாளர் செந்தில்மணி,மாவட்ட பொறுப்பாளர்கள் பரமசிவம், விமல், பகவத்சிங், பஞ்சு, அண்ணாதுரை, தனபால், சுப்பிரமணியன், முகம்மது, மீனாட்சிசுந்தரம், சதிஷ், செந்தில்குமார், நம்பிநாராயணன், கமலக்கண்ணன், நிஜாம்மைதீன், புண்ணியமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

பட விளக்கம் திருவையாறு அருகே கண்டியூர் கடைத்தெரு பகுதியில் அதிமுக சார்பில் வரும் பொதுத்தேர்தலை முன்னிட்டு வாக்குறுதிகள் அடங்கிய நோட்டீஸ்களை மாவட்ட செயலர் ரெத்தினசாமி பொதுமக்களிடம் வழங்கினார்.

## நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை மாவட்ட ஆட்சித்தலைவர் .ரஞ்ஜீத் சிங், வழங்கினார்



தேனி பிப். 18-
தமிழ்நாடு துணை முதலமைச்சர் .உதயநிதி ஸ்டாலின் புதுக்கோட்டை மாவட்டத்தில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற விழாவில், நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள்

வழங்கும் திட்டத்தின் கீழ், விளையாட்டு உபகரணங்கள் (30 வகையான விளையாட்டு உபகரணங்கள்) வழங்குவதை காணொளிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலக புதிய கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர்.ரஞ்ஜீத் சிங், தேனி பாராளுமன்ற உறுப்பினர். தங்க தமிழ்செல்வன் அவர்கள், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர்.கே. எஸ்.சரவணக்குமார் அவர்கள் முன்னிலையில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு

டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை வழங்கினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டை இந்தியாவின் விளையாட்டுத் தலைநகராக மாற்ற வேண்டும் என்ற நோக்கில், தொலைநோக்குச் சிந்தனைகளுடன் பல புதிய திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாட்டில் உள்ள மாணவர்களிடையே விளையாட்டுப் போட்டிகளை ஊக்குவிக்க ஆண்டுதோறு'ம் முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டு போட்டிகள் நடத்தப்படுகிறது. மேலும், தேசிய மற்றும் உலக அளவில் நடைபெறும் விளையாட்டுப்போட்டிகளில் தமிழ்நாட்டு விளையாட்டு வீரர், வீராங்கனைகளை பங்கேற்க செய்வதற்கு தேவையான அனைத்து உதவிகளும் அரசின் சார்பில் செய்து தரப்படுகிறது.

கடந்த ஜனவரி மாதம், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா ஞூ "இது நம்ம ஆட்டம் ஞூ 2026" போட்டிகள் நடத்த உத்தரவிட்டதன் அடிப்படையில் ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட அளவில் போட்டிகள் நடத்தப்பட்டு வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

விளையாட்டில் அதிக ஆர்வமுள்ள கிராமப்புற மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தி தருவதன் மூலம் மாநில, தேசிய மற்றும் உலக அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க செய்ய முடியும் என்ற உயரிய நோக்கத்தில், கிராமப்புற விளையாட்டு வீரர்களுக்கான கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டத்தை கடந்த 31.01.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, தேனி மாவட்டத்தில் உள்ள 130 கிராம ஊராட்சிகளுக்கும் 211 கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, இன்றையதினம் தேனி மாவட்டத்தில் உள்ள

6 நகராட்சிகளுக்குட்பட்ட 177 வார்டுகளுக்கு தலா 2 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகள் வீதம் 354 டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகள் மற்றும் 22 பேரூராட்சிகளுக்குட்பட்ட 336 வார்டுகளுக்கு

தலா 1 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகள் வீதம் 336 டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கினார்.

பின்னர், தேனி மாவட்டத்தில் உள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்குட்பட்ட வார்டுகளுக்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய தொகுப்புகளை கொண்டு செல்லும் வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் நகர்மன்றத் தலைவர்கள். ரேணுபிரியா பாலமுருகன் (தேனி அல்லிநகரம்), சுமிதா சிவக்குமார் (பெரியகுளம்), நகர்மன்றத் துணைத்தலைவர் (தேனி அல்லிநகரம்).செல்வம், பேரூராட்சித்தலைவர்கள். மிதுன்சக்ரவர்த்தி (பழனிசெட்டிபட்டி), சந்திரகலா (ஆண்டிபட்டி). பால்பாண்டி (தாமரைக்குளம்).நாகராஜ் (தென்கரை).நடேசன் (வடுகபட்டி), சுந்தரி (க.புதுப்பட்டி).ராஜேந்திரன் (அனுமந்தன்பட்டி).கீதாசசி (வீரபாண்டி).திருப்பதி (போ.மீனாட்சிபுரம்), மாவட்ட விளையாட்டு அலுவலர்.சிவக்குமார் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள், செயல் அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




## புரிந்துணர்வு ஒப்பந்தம்

கிருஷ்ணகிரி, பிப்.18-
தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில்
தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஏக்வஸ் (Aequs) குழுமம் ரூ.4,000 கோடியில் 7000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், கிருஷ்ணகிரி மாவட்டம், சிப்காட் சூளகிரி தொழிற் பூங்காவில் வான்வெளி மற்றும் பாதுகாப்பு உற்பத்திக்கான தொகுப்பு அமைப்பதற்கும், விமான இயந்திரங்கள், கியர்பாக்ஸ் உபபாகங்கள் உற்பத்தி மேற்கொள்வதற்கும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.





■ புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை தாலுக்கா கெண்டையம்பட்டி ஸ்ரீ வீரமாகாளி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக விழாவை முன்னிட்டு இன்று மது எடுப்பு பாலிய எடுப்பு விரதம் இருந்து எட்டு கரைகாரர்கள் வெகு விமர்சையாக நடைபெற்றன ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## வேளாண் கல்லூரி மாணவிகள் விவசாயிகளுக்கு இயற்கை வேளாண்மை குறித்து விழிப்புணர்வு



தஞ்சாவூர் , பிப்.18-
திருவையாறு அருகே கண்டியூரில் உசிலம்பட்டி ஆர்.வி.எஸ். வேளாண் கல்லூரி இறுதி ஆண்டு மாணவிகள் மற்றும் எம் எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் சார்பில் இயற்கை விவசாயம் குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சி கல்லூரி முதல்வர் கிருஷ்ணமூர்த்தி வழிகாட்டுதலின்படி கல்லூரி இயக்குநர் பாண்டியராஜன் அறிவுறுத்தலின் படி நடந்தது. தஞ்சை

காவிரி டெல்டா விவசாயிகள் சங்க தலைவர் ஏகேஆர் ரவிச்சந்தர், எம்எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன வளர்ச்சி அலுவலர்கள் சிலம்பரசன் , முருகன், திட்ட ஒருங்கிணைப்பாளர் பாரதிதாசன் ஆகியோர்

நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், மண் பரிசோதனை, நீர்வள மேலாண்மை, இயற்கை விவசாயம், உயிர்சத்து உரங்களின் பயன்பாடு, மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்தும் விவசாயிகள்எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து மாணவர்களுக்குவிளக்கம் அளித்தனர். மாணவிகள் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்து அரசு வழங்கும் வேளாண் மானியங்கள், பயிர் காப்பீடு திட்டங்கள், மற்றும் சந்தை வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் வேளாண் கல்லூரி மாணவிகள் ஸ்ரீகிரியா ரூபிணி , சுவேதா,ஸ்வாதிமெடோனா,வைஷ்ணவி, வஜிகா, வாணிஸ்ரீ, வர்ஷா,வெனிஸ்மா இன்பன்ட்,வித்யதர்ஷினி, யாழினி மற்றும் விவசாயிகள் அமைப்பு செயலாளர் பஞ்சாபிகேசன் விவசாயிகள் பிரியங்கா, முருகேசன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.பட விளக்கம் திருவையாறு அருகே கண்டியூரில் உசிலம்பட்டி ஆர்.வி.எஸ். வேளாண் கல்லூரி மாணவிகள் சார்பில் விவசாயிகளுடன் நடந்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில்காவிரி டெல்டா விவசாயிகள் சங்க தலைவர் ரவிச்சந்தர் பேசினார் அருகில் எம்எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன வளர்ச்சி அலுவலர்கள் சிலம்பரசன் , முருகன் மற்றும் பலர்.



# காவேரிப்பட்டினம் அங்காளம்மன் மயான சூறை திருவிழா: ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் பங்கேற்பு

## தூய்மை பணியில் பேரூராட்சி, பொதுமக்கள் பாராட்டு

கிருஷ்ணகிரி, பிப்.18

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் நேற்று மகா சிவராத்திரி முன்னிட்டு அங்காளம்மன் திருவிழா வெகு விமர்சையாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சுமார் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு அழகு குத்தி தங்களது நேர்த்திக்கடனை செலுத்தினர்.

மாலை நேரத்தில் பூங்காவனத்தம்மன் கோவில் சுவாமி தேர் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தது. இதனைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கானோர் சாமி தரிசனம் செய்து மகிழ்ந்தனர். திருவிழாவால் காவேரிப்பட்டினம் பகுதி முழுவதும் திருவிழா கோலம் பூண்டது.

ஆனால், பெருந்திரளான மக்களின் வருகையால் தெருக்களில் பிளாஸ்டிக் வாட்டர் பாட்டில்கள், உணவு தட்டுகள் உள்ளிட்ட குப்பைகள் அதிகளவில் தேங்கின.

இதனைத் தொடர்ந்து இன்று (17.02.2026) அதிகாலை முதலே காவேரிப்பட்டினம் பேரூராட்சி தூய்மை பணியாளர்கள் பேருந்து நிலையம், கோவிந்தப்ப முதலியார் தெரு, அப்பாசாமி நாயுடு தெரு உள்ளிட்ட பகுதிகளில் தீவிர சுத்திகரிப்பு பணிகளை மேற்கொண்டு நகரை தூய்மைப்படுத்தினர்.

இந்த பணிகளை நடைப்பயிற்சி சங்கத்தைச் சேர்ந்த கே.வி. ஜெயக்குமார், சிவக்குமார், மின்சாரத்துறை நண்பர்கள் குமார், கோவிந்தன், போக்குவரத்துத்துறை அலுவலர் மோகன், உயர்கல்வித்துறை அருள், ஊர் கவுண்டர் வேட்டராயன் உள்ளிட்டோர் பாராட்டினர்.

மேலும், இந்நிகழ்விற்கு பொறுப்பான காவேரிப்பட்டினம் பேரூராட்சி தலைவர் அம்சவேணி செந்தில்குமார் மற்றும் நிர்வாகத்தினரையும் இப்பணி தொடர்ந்து சிறக்க வாழ்த்தி அனைவரும் பாராட்டினர்.



# கிருஷ்ணகிரி அரசு தொழில்நுட்ப கல்லூரியில் இரண்டு பல்நோக்கு கட்டிடங்கள் முதல்வர் தொடக்கம்

## எம்எல்ஏ மதியழகன் பூமி பூஜை

கிருஷ்ணகிரி, பிப்.18

தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் அவர்கள் தலைமை செயலகத்தில் இருந்து காணொளி காட்சி வாயிலாக திட்டத்தை துவக்கி வைத்ததைத் தொடர்ந்து, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அரசு தொழில்நுட்ப கல்லூரி வளாகத்தில் இரண்டு பல்நோக்கு கட்டிடங்கள் கட்டும் பணிகளுக்கு பூமி பூஜை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் கலந்து கொண்டு பூமி பூஜை செய்து கட்டுமான பணிகளை தொடங்கி வைத்தார். மாணவர்களின் கல்வித் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், நவீன வசதிகளுடன் இந்த பல்நோக்கு கட்டிடங்கள் அமைக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இக்கட்டிடங்கள் மூலம் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள் மற்றும் மாணவர் செயல்பாடுகளுக்கான வசதிகள் உருவாகும். இதன் மூலம் தொழில்நுட்பக் கல்வி தரம் மேலும் உயர்ந்து, மாணவர்கள் பயனடைவார்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் அன்பரசு, பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், கிருஷ்ணகிரி நகர மன்ற தலைவர் சாவித்திரி கடலரசு மூர்த்தி உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# மானாமதுரை எம்எல்ஏ தமிழரசியின் கோரிக்கை நிறைவேறியது

சிவகங்கை, பிப்.18-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மாங்குளம் பகுதியில் ரூ.1.53 கோடி மதிப்பில் கட்டப்பட உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிய கட்டிடப் பணிகளுக்கு, தமிழ்நாடு முதலமைச்சர் அறிவுறுத்தலின் பேரில் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் அடிக்கல் நாட்டினார்.

நிகழ்ச்சியில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் தே.ஜெயபால கிரேஷியா, மானாமதுரை நகர்மன்ற தலைவர் மாரியப்பன் கென்னடி, திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கமாறன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



■ மதுரை மாவட்டம், பேரையூர் தே.கல்லுப்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் நடைபெற்ற மாவட்ட அளவிலான சிறுதானியத் திருவிழாவை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்து, அரசு வழங்கும் திட்டங்களை முழுமையாக பயன்படுத்தி சிறுதானிய சாகுபடியை விரிவுபடுத்தவும், தொழில்நுட்ப விவரங்கள் அறியவும்,துறை சார்பில் அமைக்கப்பட்ட பல்வேறு அரங்குகளை பார்வையிட்டு சிறுதானிய சாகுபடி தொழில்நுட்ப கையேட்டினை விவசாயிகளுக்கு வழங்கினார்.

# தாகத்தில் தவிக்கும் மருதநல்லூர்: கிணற்றடியில் கண்ணீர் வடிக்கும் மக்கள்



கமுதி, பிப்.18-

"திராவிட மாடல்" ஆட்சியில் தமிழ்நாட்டின் பல பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்கள் பேசப்பட்டாலும், இராமநாதபுரம் மாவட்டத்தின் கடைக்கோடி கிராமங்கள் இன்னும் ஒரு குவளை குடிநீருக்காகப் போராடி வருவது வேதனை அளிப்பதாக உள்ளது.

ஆழமான கிணறு... அடியில் தேங்கிய தண்ணீர்: கமுதி தாலுக்கா, மருதநல்லூர் கிராமத்தில் நிலவும் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு குறித்த காட்சிகள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன. ஊர் பொதுக் கிணற்றில் தண்ணீர் மிகக் குறைந்த அளவே உள்ளது. இதனை எடுக்க பெண்கள் உயிரைப் பணயம் வைத்து கிணற்றுக்குள் கயிறு கட்டி இறங்கும் அவல நிலை நீடிக்கிறது.

முக்கியக் கோரிக்கைகள்: * தண்ணீர் விநியோகம்: கிராமத்திற்கு முறையாக லாரிகள் மூலம் குடிநீர் வழங்க வேண்டும்.

புதிய திட்டங்கள்: காவிரி கூட்டுக் குடிநீர் திட்டம் போன்ற திட்டங்கள் மருதநல்லூர் கிராமத்தின் ஒவ்வொரு வீட்டையும் சென்றடைவதை உறுதி செய்ய வேண்டும்.

பராமரிப்பு: உள்ளூர் நீர்நிலைகளையும், கிணறுகளையும் தூர்வாரி குடிநீர் ஆதாரங்களை மேம்படுத்த வேண்டும்.

அரசுக்குக் கேள்வி: வீடு தேடி வரும் குடிநீர் திட்டங்கள் குறித்த விளம்பரங்கள் ஒருபுறம் இருக்க, மறுபுறம் ஒரு குடம் தண்ணீருக்காக நாள் முழுவதும் கிணற்றடியில் காத்திருக்கும் மருதநல்லூர் மக்களின் குரல் இந்த திராவிட மாடல் அரசின் காதுகளுக்கு எட்டவில்லையா? நிர்வாகத்தின் மெத்தனப் போக்கால் சாமானிய மக்கள் அடிப்படைத் தேவைக்காக அல்லல்படுவது எப்போது முடிவுக்கு வரும்?

"தாகத்தில் தவிக்கும் மருதநல்லூர் மக்களின் நிலையை உணர்ந்து, மாவட்ட நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்பதே சமூக ஆர்வலர்களின் எதிர்பார்ப்பாக உள்ளது.

# மானாமதுரையில் அதிமுக கண்டன ஆர்ப்பாட்டம்: விஜய் மற்றும் திமுக அரசை விமர்சித்த ஆர்.பி. உதயகுமார்

மானாமதுரை, பிப்.18-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை நகராட்சிப் பகுதிகளில் நிலவும் சுகாதாரச் சீர்கேடுகள் மற்றும் நிர்வாகக் குளறுபடிகளைக் கண்டித்து, அதிமுக சார்பில் பிரம்மாண்ட கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளரும், சிவகங்கை சட்டமன்ற உறுப்பினருமான செந்தில்நாதன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், முன்னாள் அமைச்சர் ஆர்.பி. உதயகுமார் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றினார்.





ஆர்ப்பாட்டத்தின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு: திமுக அரசு மீது குற்றச்சாட்டு செய்தியாளர்களிடம் பேசிய ஆர்.பி. உதயகுமார், கடந்த ஐந்து ஆண்டுகளாக மக்களின் அடிப்படைத் தேவைகளைப் புறக்கணித்துவிட்டு, தற்போது தேர்தலை முன்னிட்டு ரூ. 5,000 போன்ற அறிவிப்புகளை வெளியிட்டு திமுக அரசு மக்களை ஏமாற்றப் பார்ப்பதாகக் குற்றம்சாட்டினார். முந்தைய நலத் திட்டங்களுக்குப் பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டதால், தகுதியுள்ள பலருக்குப் பயன் கிடைக்கவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

விஜய் குறித்த விமர்சனம் தமிழக வெற்றி கழகத் தலைவர் விஜய் குறித்துக் கருத்து தெரிவித்த அவர்: * திரைத்துறையில் வெற்றி பெற்ற விஜய், அரசியலில் இன்னும் தனது முதல் "தேர்வை" எழுதவில்லை. தேர்வை எழுதினால் மட்டுமே அவரது அரசியல் திறன் குறித்து மக்கள் மதிப்பிட முடியும்.

தற்போதைய நிலையில் அவருக்கு அரசியல் அனுபவம் குறைவாகவே உள்ளது.

கூட்டணி மற்றும் அரசியல் நிலைப்பாடு தேசிய ஜனநாயகக் கூட்டணி வலுப்பெற்று வருவதாகவும், எதிரணியின் கூட்டணி தளர்ந்து வருவதாகவும் குறிப்பிட்ட அவர், எடப்பாடி கே. பழனிசாமி மக்களின் முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து உழைத்து வருவதாகப் பெருமிதம் தெரிவித்தார். மேலும், தமிழகத்தில் கூட்டணி ஆட்சிக்கு மக்கள் எப்போதும் எதிர்ப்பு தெரிவித்ததில்லை என்றும், புதிய கருத்துகளின் வெற்றியை காலமே தீர்மானிக்கும் என்றும் கூறினார்.

பாதுகாப்பு மற்றும் நிர்வாக விமர்சனம் கரூர் சம்பவத்தில் 41 பேர் உயிரிழந்தது குறித்து அரசு அக்கறையின்றிச் செயல்படுவதாக விமர்சித்த அவர், "யார் உயிரிழந்தாலும் பரவாயில்லை, நான் முதலமைச்சர்" என்ற அணுகுமுறையைத் தமிழக மக்கள் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என எச்சரித்தார்.

பங்கேற்பாளர்கள்: இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட இளைஞரணி துணைச் செயலாளர் மானம்பாக்கி இரா. சுரேஷ் பாபு, மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் மு. கணேசன், நா. மணிகண்டன், இளைஞர் பாசறை துணைச் செயலாளர் போ. பிரபு, அமைப்பு சாரா தொழிற்சங்க நிர்வாகிகள் ரா. மாயழகு, பா. வீராச்சாமி, இலக்கிய அணி நிர்வாகிகள் சீனிவாசன் சுரேஷ், சசிக்குமார், தகவல் தொழில்நுட்ப அணி (மிஜி கீவீஸீ) நிர்வாகிகள் கருப்புச்சாமி, பழனிபாண்டி மற்றும் பதினெட்டாங்கோட்டை சிவராமன் உள்ளிட்ட ஏராளமான கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



# தண்ணீர் இன்றி தவிக்கும் அரிமண்டபம் கிராமம்: ஒரு மாத காலமாக தீராத குடிநீர் பிரச்சனை பொதுமக்கள் கடும் அவதி

மானாமதுரை, பிப்.18-

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியம், அரிமண்டபம் கிராமத்தில் கடந்த ஒரு மாத காலமாக நிலவி வரும் கடும் குடிநீர் தட்டுப்பாட்டினால் பொதுமக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர்.

தொடரும் குடிநீர் சிக்கல் அரிமண்டபம் கிராமத்தில் கடந்த ஒரு மாதமாக குடிநீர் விநியோகம் சீராக இல்லை என புகார் எழுந்துள்ளது. முறையான பராமரிப்பு இல்லாததாலும், போதிய கால இடைவெளியில் தண்ணீர் திறக்கப்படாததாலும் அன்றாடத் தேவைகளுக்குக் கூட தண்ணீர் கிடைக்காமல் மக்கள் அல்லலப்பட்டு வருகின்றனர்.

பாதிக்கப்படும் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் இது குறித்து தமிழக மக்கள் முன்னேற்ற கழகத்தின் மானாமதுரை ஒன்றிய இணை செயலாளர் கரு. பகத்சிங் மற்றும் கிராம பொதுமக்கள் கூறுகையில்: › "தொடர்ச்சியாகவும், சரியான முறையிலும் குடிநீர் வழங்கப்படுவதில்லை. இதனால் பள்ளி செல்லும் குழந்தைகள், முதியவர்கள் மற்றும் பெண்கள் கடும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். குடிநீருக்காக நீண்ட தூரம் அலைய வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது," என வேதனையுடன் தெரிவித்தனர்.

நிர்வாகத்திற்கு கோரிக்கை இந்த விவகாரத்தில் சிவகங்கை மாவட்ட ஆட்சியர், மாவட்ட நிர்வாகம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் உடனடியாகத் தலையிட வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர். தமிழக அரசு இந்த விவகாரத்தில் தனிக் கவனம் செலுத்தி, அரிமண்டபம் கிராம மக்களின் அடிப்படைத் தேவையான குடிநீர் பிரச்சனையை போக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தமிழக மக்கள் முன்னேற்ற கழகம் மற்றும் கிராம பொதுமக்கள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,
Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161